75—

கூடுதல் நீதிமன்றம்

***71—திரு. சு. ரவி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதிய நீதிமன்றங்களைத் தொடங்க வேண்டுமென்றால், அந்த நீதிமன்றங்களிலே தேங்கியிருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை, புதிதாகத் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, உயர் நீதிமன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் உலகத்திலே வாழ்கின்ற 10 கோடி தமிழக மக்களுடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடிகொண்டு, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 100 ஆண்டு சாதனைகளை நூறே நாட்களில் செய்து முடித்து, சத்தமில்லாமல் சாதனை புரிந்து வருகின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். சட்டத் துறையிலே பல்வேறு சாகசங்களை நிகழ்த்தி வருகின்ற மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2017 ஜூன் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைத் தொடுத்து அதற்கான விடை வருவதற்கு முன்பே, நேற்றையதினம் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கை விவாதத்திற்கான பதிலுரையிலே, அரக்கோணத்தில் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கு சென்னை உயர் நீதிமன்றத்திடம் அரசு அறிக்கை கேட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். தற்போதும் பரிசீலிக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரக்கோணத்திலே மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென மக்கள் நீண்ட காலமாகக் கோரி வருகின்றனர். ஏனென்றால், அரக்கோணத்திலே குற்றவியல் நடுவர் நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் இயங்கி வருகின்றன. என்னுடைய தொகுதியிலே இருக்கிற மக்கள், மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 50 கிலோ மீட்டர் தூரமுள்ள ராணிப்பேட்டைக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. வழக்கறிஞர்கள், வழக்காடிகள், காவல் துறையினர், அரசு அலுவலர்கள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எல்லோரும் அங்கே செல்வதற்கும், வருவதற்கும் ஒருநாள் முழுவதும் ஆகி விடுகிறது; அதனால் நீதி கிடைக்கவும் காலதாமதம் ஏற்படுகிறது. "Justice delayed is Justice denied", *'தாமதமாக வழங்கப்படுகிற நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும்' என்று சொல்வார்கள். ஆகவே, என் தொகுதியில் இருக்கிற மக்களுக்கு விரைந்து நீதி கிடைத்திட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மிக அவசியமாகக் கருதி, இந்த ஆண்டே மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தைத் தொடங்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவிலே, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையைப் பெற்று, அவர் கோரியபடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-40

திரு. சு. ரவி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அரக்கோணத்தில் ஒரு சார்பு நீதிமன்றத்தை அமைத்துக் கொடுத்தார்கள். அந்த சார்பு நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு, பொதுப் பணித் துறையால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கை தொடர்பான பரிந்துரையையும் உயர் நீதிமன்றத்திலிருந்து கேட்டுப் பெற்று, சார்பு நீதிமன்றத்திற்கு கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் பல புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று நான் அவையில் தெரிவித்ததுபோல, இந்த ஓராண்டு காலத்தில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக மட்டும் 659.1 கோடி ரூபாய் இந்த அரசால் செலவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கோரிக்கை தொடர்பான பரிந்துரை உயர் நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்றவுடன், உடனடியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*